2015 மார்ச் 27]

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலேதான் நெசவாளர்களுக்கு ரூ.2,60,000/- என்ற மதிப்பீட்டில் 10,000/- வீடுகள் கட்டுவதற்காக ரூ.260 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான உதவியும் இல்லாமல், தமிழக அரசின் நிதியைக் கொண்டு இன்றைக்கு 6,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 4,000 வீடுகள் கட்டி முடிக்கக்கூடிய தருவாயில் உள்ளன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேரூராட்சி, நகரப் பகுதிகளில் உள்ள நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் தர வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். தற்போது கட்டப்படும் 10,000 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்ட பின்பு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரைவிலே தங்களது திருக்கரங்களால் அனைத்து இடங்களிலும் திறந்து வைப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை போன்று பல்வேறு பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் வசிக்கும் நெசவாளர்களும் இந்தக் கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். இதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆவன செய்வதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவோம் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

73—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***48429—திரு. க. பீம்ராவ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரவாயல் தொகுதி, மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் பணியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

[2015 மார்ச் 27

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வுலகத்தை ஆளும் ஆற்றல் பெற்றிருக்கின்ற வாழும் மனித தெய்வம் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 91, வருவாய் [வநி2(1)] துறை, நாள் 25-2-2014-ன்படி ரூ.202/- இலட்சம் நிதி ஒதுக்கீடு, செய்து, நிருவாக அனுமதி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணையின்படி, மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, நில மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் நில நிருவாகத் துறை மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆணை பெறப்பட்ட பின்பு கட்டடம் கட்டிட மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த நல்லரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.*

திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதுரவாயலில் இருக்கக்கூடிய தாசில்தார் அலுவலகம்* Community Hall-*ல் இருக்கின்றது. அது* Corporation-*க்குச் சொந்தமான இடம். ஏராளமான மக்களுடைய குடும்ப விழாக்கள் நடக்கக்கூடிய இடம். எனவே, உடனடியாக அதை இடமாற்றம் செய்து, பக்கத்தில் வளசரவாக்கத்தில் உள்ள 2½ ஏக்கர் இடத்தில்* building *கட்டுவதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொண்டால், ஏற்கெனவே இருக்கக்கூடிய* Community Hall-*ஐ மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது, கடந்த ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம். ஓராண்டுக்கு மேலாக காலதாமதமாகிறது. எனவே, இதனை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

2015 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் நகராட்சிக்குச் சொந்தமான இடம் என்று சொன்னார்கள். அது நகராட்சிக்குச் சொந்தமான இடம் இல்லை. அது நகராட்சியின் பயன்பாட்டில் இருக்கக்கூடிய இடம். அது அரசினுடைய கசம் புறம்போக்கு நிலமாக இருப்பதனால் அதற்கு நீர்வள ஆதாரத் துறை அதிகாரிகளிடத்தில் உரிய ஒப்புதல் பெறவேண்டியுள்ளது. ஒப்புதல் பெற்றபின் நிலம் வருவாய்த் துறைக்கு மாற்றம் செய்து, உடனடியாக கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதல்களோடு நடைபெறும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை சந்தித்துப் பேசியிருக்கிறேன். அது கசம் புறம்போக்கு என்று பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் வகைப்படுத்தப்பட்டது என்று நினைக்கிறேன். அங்கு கசிவுநீர் குட்டையெல்லாம் இல்லை. நீர் குட்டையும் அங்கு இல்லை. குப்பைகள் அதிகமாக இருந்தது. அதையெல்லாம் எடுத்துவிட்டார்கள். அதை உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களால் செய்ய முடியும். எனவே, மக்களின் நிலையைக் கருத்தில்கொண்டு, அங்குள்ள இரண்டரை ஏக்கர் நிலத்தில், தீயணைப்பு நிலையத்திற்கு, சார் கருவூலத்திற்கு, சார் பதிவாளர் அலுவலகத்திற்கு என ஒருங்கிணைந்த வளாகம் ஒன்று உருவாக்க முடியும். அதையும் சேர்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டுமென்று மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 மார்ச் 27

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அங்கு குட்டைகள் இல்லை. ஆனால் வருவாய்த் துறையினுடைய ரெக்கார்டுகளிலே கசம் புறம்போக்கு நிலப்பரப்பாக இருப்பதனாலே உரிய அனுமதியை உரிய துறையிடமிருந்து பெறவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல பயன்பாட்டிற்கு ஏற்ற இடமாகவும், ஏ1 நோட்டீஸ் கொடுக்கின்றபோது எந்தவிதமான மக்களுடைய எதிர்ப்பும் இல்லை என்பதும் அதிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உரிய அனுமதி பெற்று, அங்கு உரிய கட்டடம் கட்டினால்தான் பிற்காலத்திலே எந்த எதிர்ப்புகளும் வராமல் இருக்கும் என்ற அடிப்படையிலேதான் தொலைநோக்குச் சிந்தனையோடு, தொலைநோக்குப் பார்வையோடு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற நல்லரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

தரம் உயர்த்துதல்

***46216—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், விக்கிரபாண்டியம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம்*